**தலைப்பு 291 – கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூன் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல ்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) ஆதனம், பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி, இயந்திர மற்றும் உபகரணங்களுக்கான கணக்குகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் ஆதனம், பொறி, இயந்திர மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா.548,611,863 ஆக காணப்பட்டது. ஆனால், திறைசேரியின் அச்சிட்டுகளின் படி, 2021 சனவரி 01 ஆம் திகதியில் ஆதனம், பொறி, இயந்திர மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா.550,334,614 ஆக காணப்பட்டது. எனவே, இந்த மீதிகளுக்கு இடையில் ரூபா.1,722,752 பெறுமதி வேறுபாட்டினை காட்டியது. எனினும், இவ்வேறுபாட்டிற்கான காரணம் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான வாக்கு பதிவேட்டு இல.2104 இன் கீழ், நீர்கொழும்பு அலுவலகத்தின் திருத்த வேலைகளுக்கான கொடுப்பனவு சிட்டையினை தீர்ப்பதற்காக ரூபா. 1,722,752 கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கூறப்பட்ட செலவினம் திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்பில் குறிப்பிப்பட்டுள்ள கட்டடங்களின் ஆரம்ப மீதியுடன் சேர்க்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டின் இறுதி மீதிக்கும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கான காரணத்தை நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | இயங்கு நிலையிலுள்ள 02 வாகனங்களின் பெறுமதி ரூபா. 7,800,000 ஆனது 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான இந்த 02 வாகனங்களின் புதிய பெறுமதியினைப் பெற்ற பின்னர் கணக்கீடுகள் மேற்கொள்ளப்படும் | இயங்கு நிலையிலுள்ள வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். |

(ஆ)கட்டுநிதி கணக்குகளின் சீராக்கல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | எனைய வருமானத் தலைப்பிற்காக அறிக்கையிடல் முகவர்களினால் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா. 104,663,433 பெறுமதியான கட்டுநிதி இணக்கக் கூற்றில் காட்டப்பட வேண்டும் எனினும் அது ரூபா. 88,761,535 ஆக காட்டப்பட்டிருந்தன. | ஏனைய வருமானத் தலைப்பிலிருந்த வசூலிக்கப்படுகின்ற தொகைகள் நிதி செயலாற்றல் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டதால், கட்டுநிதியில் ஏனைய வருமானத் தலைப்பிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகைகள் வருமானத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | கட்டுநிதி இணக்கக் கூற்றுக்களில் சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ii) | ரூபா.507,265 பெறுமதியான செலவினமானது எனைய வருமான தலைவர்களுக்கு பதிலாக அறிக்கையிடல் முகவரினால் மேற்கொள்ளப்பட்ட கட்டுநிதி இணக்கக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | (i) விடயம் 151-2-3-(65)-2506,(71),(73) மற்றும் (74) இன் கீழ் ரூபா.275,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீன்வள அமைச்சின் விடயத்திலிருந்து குறுக்கு உள்ளீடுகளின் மூலம் பெறப்பட்ட உரிமக் கட்டண வருமானமாகும்.<br><br>(ii) 253-1-2-4-1502-ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய சம்பளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா. 590,932 பெறுமதியானது முற்பண "B" கணக்கு தொடர்பான குறுக்கு பதிவுகளின் ஒரு பகுதியாகவுள்ளது.<br><br>(iii) 130-1-2-0-1003 – 2021 ஆம் ஆண்டில் பயிற்சிக் காலத்தில் பயிற்சிக்காக இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் சேவையை உறுதிப்படுத்திய பின்னர் சம்பளத்தை செலுத்துவதில் அறவிடப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா. 358,666 பெறுமதியானது விடய இல. 291-1-1-0-1003 இல் வரவு வைக்கப்பட்டதுடன் விடய இல. 130-1-2-0-1003 இல் செலவு வைக்கப்பட்டது. நிதிச் செயலாற்றல் கூற்றில் விடயம் 291-1-1-0-1003 இன் | பொதுக் கணக்கு வழிகாட்டுதல் இல. 2021/03 இன் பிரிவு 7.10 இன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

கீழ் இச் செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதேபோல், அதே பெறுமதியானது கட்டுநிதி இணக்கக்கூற்றின் குறுக்கு குறிப்பினால் கொடுப்பனவின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செலவினங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விடய இல. 1401 (போக்குவரத்து) இற்காக வரவு செலவுத் திட்டத்தில் ரூபா.3,800,000 ஏற்பாடு செய்யப்பட்டதில் ரூபா.2,150,000 விடுபட்டிருந்தன. அதில் ரூபா. 2,000,000 ஆனது உண்மை பாதீட்டு ஏற்பாட்டில் 52.6 சதவீதமாகும். செலவின விடய இல. 1404 (வரிகள் மற்றும் உள்ளூராட்சி வரிகள்) இற்கு ரூபா.800,000 மாற்றப்பட்டிருந்தன. விடய இல. 1409 (ஏனைய சேவைகள்) இற்கு ரூபா.1,200,000 மாற்றப்பட்டது. வாகன கொடுப்பனவுகளை வைத்திருக்கும் உத்தியோகத்தர்களின் இடமாற்றம் மற்றும் குறித்த ஏற்பாடுகளின் இடமாற்றத்திற்கான காரணம் கூறப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் போக்குவரத்து கொடுப்பனவுகளை மீளாய்வு செய்யும் போது அதற்கான காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உறுதிப்படுத்தப்படவில்லை. | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்துக் கட்டணத்தைத் தவிர, பொருட்கள் போக்குவரத்து இந்த விடயத்திலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. கடந்த வருடம் நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்கள் வரவழைக்கப்பட்டதால், அவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அதிகாரிகளின் போக்குவரத்துக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், தொற்றுநோய் நிலைமையின் போது போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாக போக்குவரத்து வசதிகள் வழங்கப்படவில்லை, மேலும் செலவுக் கட்டுப்பாடுகள் காரணமாக கொள்வனவுகள் தடைசெய்யப்பட்டது. எனவே, பொருட்களைக் கொண்டு செல்வதற்கான செலவுகள் குறைவாக இருந்ததால் மேற்குறிப்பிட்ட சேமிப்புகள் செய்யப்பட்டுள்ளன. | விதிகளை மாற்றுவதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் வழங்கப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி ஒழுங்குமுறை விதிகள் 94(1) இன் படி, வேறுவிதமாக வழங்கப்பட்டுள்ளதைத் தவிர, வருடாந்த மதிப்பீட்டில் நிதி ஏற்பாடுகள் இல்லாமையினால், சேவை அல்லது வழங்கல்களுக்காக எவ்வித செலவும் அல்லது அர்ப்பணிப்பும் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், விடய இல. 1101 (உள்ளூர் பயணச் செலவினம்)இற்கான ஏற்பாடுகள் இல்லாத போது ரூபா.1,332,911 வரவினை அடைந்தது. | அத்தியாவசிய கடமை வழக்குகளின் அதிகரிப்பு காரணமாக, இதுபோன்ற வழக்குகளுக்கு அதிகாரிகள் அதிக கடமை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. செலவின விடய இல.1101 - திட்டமிடப்படாத அவசரச் சூழல்களால் உள்ளூர் பயணச் செலவுகளுக்காக உறுதி செய்யப்பட வேண்டும். | நிதி ஒழுங்கு விதி முறைகளை செயற்கிறனாக கையாளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய விடய இல. 1409 (ஏனைய சேவைகள்) இற்கு ரூபா.7,604,211 பொறுப்புக்களாகும். 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான பாதுகாப்பு சேவைகளின் தொகை ரூபா. 5,713,421 கடற்றொழில் அமைச்சிற்கு செலுத்தப்பட வேண்டும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்காக செலுத்தப்பட வேண்டிய சுகாதார சேவை செலவுகள் ரூபா.1,890,790 பெறுமதியானது உள்ளடக்கப்பட்டுள்ளது. | கடற்றொழில் அமைச்சிற்கு மீளச்செலுத்தப்பட வேண்டிய செலவினங்களை, ஏனைய சேவைச் செலவினங்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் ஒதுக்கீட்டில் பூர்த்தி செய்ய முடியாது, மேலும் கூடுதல் ஒதுக்கீடுகள் கோரி தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் மேலதிக ஏற்பாடுகள் பெறப்படாததால் இப் பெறுமதியானது தொடர்ச்சியாக காணப்படுகின்றது. | கடந்த ஆண்டுகளின் பொறுப்புகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுடன் தொடர்புடைய ரூபா.1,570,041 கடன்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டதில் 2022 சனவரி 11 ஆம் திகதி வரையிலான செலவுகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டுடன் தொடர்பான பொறுப்புகளில் ஒரு பகுதியை உள்ளடக்குவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படவில்லை. | அனைத்து பொறுப்புகளும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் மாதிரிக் கணக்காய்வில் கீழ்வருமாறு அவதானிக்கப்பட்டன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணங்காமைகள் | | |
| (அ) | 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திருத்தச் சட்டம் | | | | |
| | பிரிவு 31(4). | 1,984,556 | 2015 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை அகற்றுவதற்காக ரூபா.2,539,683 செலவிடப்பட்டுள்ளதுடன், திணைக்களத்திடம் இருந்து மீளப்பெற வேண்டிய ரூபா.1,984,556 இதுவரை மீளப் பெறப்படவில்லை, மேலும் மொத்தச் செலவினத்தில் மீளப்பெற வேண்டிய தொகை 78.1 சதவீதமாகவுள்ளது. | 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை அகற்றுவதற்காக செலவிடப்பட்ட தொகையிலிருந்து ரூபா. 555,127 மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், மீதியான தொகையை மீளப் பெறுவதற்கான சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் படி, அங்கீகரிக்கப்படாத கட்டமானங்களை அகற்றுவதற்கு ஏற்பட்ட செலவினங்கள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.3.1 (அ) | - | பெறுகைகளை தயாரிப்பதற்கான செலவுகள் மற்றும் ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னரான நடவடிக்கைகளின் செலவுகள் மொத்த மதிப்பீட்டில் தனித்தனியாக | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் ஆரம்ப மொத்த செலவு மதிப்பீட்டு தயாரிக்கப்படும். | பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | குறிப்பிடப்பட வேண்டும் என்றாலும், விலைமனு கோரல்களுக்காக செய்யப்பட்ட செய்தித்தாள் விளம்பர செலவுகள் மொத்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை | |

## 2.4 முற்பணங்களை தீர்த்தல் மற்றும் வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் முதலாவது முற்பணமாக ரூபா. 25,000 பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் அதனை தீர்க்கப்படாமல் இரண்டாவது முற்பணமாக ரூபா.100,000 அதே உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. மேலும் 04 மாதங்கள் மற்றும் ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு அந்தத் தொகையைப் பயன்படுத்தாமல் மீளச்செலுத்தப்பட்டது. அதேபோன்று முற்பணமாக ரூபா 30,000 பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர் ஒருவரும் 08 மாத காலத்திற்குப் பின்னர அந்தத் தொகையைப் பயன்படுத்தாமல் தீர்வு செய்யப்பட்டது. | சேவைத் தேவையின் காரணமாக குறிப்பிட்ட அதிகாரி வேறு பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். எனவே, இவ்வாறு பெறப்பட்ட முற்பணங்கள் பயன்படுத்தப்படாமல், பணமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | முற்பணத் தேவைகளை துல்லியமாக அடையாளம் காணப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளின் செயல்திறன் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2012 முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை இனங்காணப்பட்ட 2,341 சட்டவிரோத கட்டுமானங்களில் 1,721 சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுவதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. 2021 திசெம்பர் 31 இற்குள் இடிக்க உத்தரவிடப்பட்ட 2,074 சட்ட விரோத கட்டுமானங்களில் | சட்டவிரோத கட்டுமானங்கள் நாடளாவிய ரீதியில் வெவ்வேறு இடங்களில் காணப்படுவதனால், ஒரேயொரு இடத்தில் அனுமதியற்ற கட்டடங்களை அகற்றுவதற்கு பாரிய செலவீனங்கள் ஏற்படுவதுடன், பொதுமக்களின் பலத்த | சட்டவிரோத நிர்மாணங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான மாற்றுத் தீர்வுகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இடிக்கப்பட்ட கட்டுமானங்களின் எண்ணிக்கை 446 ஆகவும், இடிக்க உத்தரவிடப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களின் எண்ணிக்கையில் 21.5 சதவீதமாகவும் காணப்பட்டன. | எதிர்ப்புகள், கொவிட் தொற்று நிலைமை, இயலாமை, வெளியேற்றப்படுவதற்குப் பதிலாக புதிய மாற்று இடங்களை வழங்குதல், மக்கள் பிரதிநிதிகளின் செல்வாக்கு மற்றும் அகற்றுவதற்கு வருகை தரும் அதிகாரிகளுக்கு போதுமான பாதுகாப்பை வழங்காதது மற்றும் அதற்கான உதவிகளைப் பெறும் மக்கள் போன்ற காரணங்களால் அந்த அகற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள முடியவில்லை. |

## 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படாத ஏற்பாடுகளில் ரூபா.58 மில்லியன் ஏற்பாடு களுத்துறையில் கலீலோ கடற்கரையில் 400 மீற்றர் நீளமான தடுப்புக் கட்டை அமைப்பதற்காக 2021 திசெம்பர் 31 இல் ரூபா. 22 மில்லியன் வழங்கப்பட்டது. அதே திகதியில் 33 சதவீதமான பௌதீக முன்னேற்றம் மட்டுமே காட்டப்பட்டது. | மீளாய்வாண்டில் முன்மொழியப்பட்ட கட்டுமானத்திற்கு தேவையான பெரும்பாலான கட்டுமானப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கு பணம் செலுத்தப்படவில்லை. அதன் II ஆம் கட்ட பணி 135 மீற்றர் மட்டுமே நிறைவடைந்தது. அதன்படி, பக்கவாட்டுச் சுவர் கட்டுமான பணியின் பௌதீக முன்னேற்றம் 33 சதவீதம் எனக் கூறலாம். | புனரமைப்பு வேலைகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் லுனாவ 500 மீற்றர் புனரமைப்புக் கரையை புனரமைப்பதற்காக பயன்படுத்தப்படாத ஏற்பாடுகளில் ரூபா.16.1 மில்லியன் பெறுமதியில் ரூபா.25 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டது, அதே தினத்தில் 25 சதவீத பௌதீக முன்னேற்றத்தை மட்டுமே காட்டுகின்றது. | உண்மைகள் காரணமாக அழிவடைந்த அணையின் சீரமைப்பு முன்னேற்றமாகவுள்ளது. அதாவது அணைக்கட்டு புனரமைக்கும் பகுதியில் வீதிகளை அமைக்கவும், வேலைகளை தளத்தை தொடங்கும் போது, கட்டுமானப் பகுதியின் தொழிற்பாடுகளுக்கு தற்காலிக மட்ட குறுக்குகள் அமைக்கவும், பெறுகைகள் மூலம் மூலப்பொருட்களை வழங்குனர்களை மீண்டும் தேர்வு செய்ய வேண்டும், விலை உயர்ந்த பொருள் வழங்குனர் கோரிக்கை | புனரமைப்பு வேலைகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விடுத்துள்ளார். சந்தையில் எரிபொருள் மற்றும் ஏனைய தொடர்புடைய மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக மூலப்பொருட்களை வழங்குகின்ற ஒரு அலகு மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பதற்கு மூலப்பொருள் வழங்குனரினால் கோரிக்கை வழங்கப்பட்டது. | |
| (இ) | முத்துப்பாண்டியாவிற்கு வடக்கே 115 மீற்றர் தூரத்தில் உள்ள அணைக்கட்டுக் கரையை விரிவுபடுத்துவதற்கு ரூபா.11 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், அவற்றைச் செய்வதற்குத் தேவையான இயந்திரங்களை வாங்க இயலாமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்படாத ஒதுக்கீடு ரூபா.5.7 மில்லியன் காணப்பட்டது. அத்துடன் அது தொடர்பான பனர்வாழ் செயற்பாடுகளை அன்றைய திகதியில் முன்னெடுக்க முடியவில்லை. | கொள்வனவு செய்வதற்கு தேவையான இயந்திரங்களை வழங்க வழங்குனர்கள் முன்வராததால், அந்த ஆண்டில் மட்டும் கட்டுமான பொருட்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, ரூபா.5.3 மில்லியன் மூலப்பொருள் வழங்குவதற்கு செலவிடப்பட்டுள்ளது. கட்டுமான இயந்திரங்கள் கிடைக்காததால் ரூபா.5.7 மில்லியன் நிதியை செலவிட முடியவில்லை. | புனரமைப்பு வேலைகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். |

**3.3 செயற்றிட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கீழ் கட்டுனேரியாவின் பங்கடா சந்தியில் உள்ள 250 மீற்றர் புனரமைப்பு செயற்திட்டமானது, 2021 ஆம் ஆண்டில் அவசரகால கடலோரப் பாதுகாப்புப் பணியின் கீழ் சேர்க்கப்பட்டு, ரூபா.56,979 செலவழித்த பின்னர் நிறைவேற்றாமல் கைவிடப்பட்டது. | தென்மேற்கு பருவமழையின் போது ஏற்பட்ட இந்த திடீர் கரையோர அரிப்பு நிலைமையை தொடர்ந்து நிவர்த்தி செய்ததால் கட்டுமானம் தேவைப்படுவதில்லை. | அவசரகால கரையோரப் பாதுகாப்புப் பணிகள் குறித்து குறிப்பிட்ட அடையாளம் காணப்பட வேண்டும். |

**3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உபபிரிவு 16(2) இன் | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் செயல்திறன் அறிக்கையும் உரிய | வருடாந்த நிதிக் கூற்றுகளுடன் வருடாந்த |

| | | |
|---|---|---|
| படி ஒவ்வொரு நிறுவனமும் அதன் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயல்திறன் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றாலும், இது செய்யப்படவில்லை. | காலத்தில் அனுப்பப்படும். | செயல்திறன் அறிக்கை வழங்கப்பட வேண்டும். |

**3.5 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சரியான நேரத்தில் நிலப்பரப்பின் தேவைகளை அங்கீகரிக்காதது, குறைந்தபட்ச இருப்பு அளவை பராமரிக்காதது மற்றும் மறுகட்டளை நிலைகளை சரியாக அடையாளம் காணாதது அவசர கொள்வனவுகளை ஏற்படுத்தியது, மேலும் விலையை மேற்கோள் காட்டிய அதே நிறுவனத்திடமிருந்து நிலப்பரப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மற்றும் 2020 திசெம்பர் 10 ஆம் திகதியில் அவசரகால கொள்வனவுகளில் கீழ் ஒரு சதுர மீட்டருக்கு ரூபா.597.38 செலவிடப்பட்டது. 2021 பெப்ரவரி 18 ஆம் திகதியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, பொது கொள்வனவு செயன்முறையின் கீழ் ஒரு சதுர மீட்டர் நிலப்பரப்பை ரூபா. 382.70 இற்கு கொள்வனவு செய்யமுடியும். ஆவசரகால கொள்வனவுகளின் கீழ் 2,320 சதுர மீற்றர் நிலப்பரப்பை வழங்கியதன் காரணமாக ஒரு சதுர மீற்றருக்கு ரூபா.214.68 வீதம் திணைக்களத்தினால் ரூபா.498,058 அதிகமாக செலுத்தப்பட்டது. | 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மீதமுள்ள நிலப்பரப்பு 2020 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டது. 40,000 கனமீற்றர் நிலப்பரப்பு வெளிநாட்டு சந்தையில் இருந்து உள்ளூர் முகவரினால் மொத்த விற்பனை மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. எனவே, ஒரே நேரத்தில் ஒரு பெரிய அளவு வாங்கும் போது, ஒரு சதுர மீட்டருக்கான செலவு பொதுவாக குறைவாக இருக்கும். அவசரகால கொள்வனவுச் சந்தர்ப்பங்களில், உள்ளூர் சந்தையில் கிடைக்கும் நிலப்பரப்புக்கள் வாங்கப்படுகின்றன, பின்னர் உள்ளூர் நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட நிலப்பரப்புக்கள் உறைகள் கொடுக்கப்படுகின்றன. அவசரகால கொள்வனவு குறைந்தபட்ச தேவையை அடிப்படையாகக் கொண்டது. இறக்குமதி செய்யப்பட்ட நிலப்பரப்பு, நடைமுறையில் உள்ள டொலரின் மதிப்பு மற்றும் அவரது இலாபம், துறையின் தேவை மற்றும் அளவு ஆகியவற்றின் காரணமாக டொலரின் மதிப்பில் மாற்றம் காரணமாக இச் செலுத்தும் தொகை அதிகரித்துள்ளது. | மறுகட்டளை மட்டம் கண்டறியப்பட்டு, அதற்கேற்ப கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொடுப்பனவுகளுக்கு அங்கீகரிக்க அதிகாரம் பெற்ற அதிகாரி, வழங்குனர்களின் விடயத்தில் அதைச் சரிபார்ப்பதற்குப் பொறுப்பாவார், நிதி ஒழுங்கு விதி 137(5) இன்படி அவை ஆய்வு செய்யப்பட்டு, சரியாகப் பொறுப்பேற்கப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், அந்த மர தளபாடங்கள் திணைக்களத்தால் முழுமையாகப் பெறப்படாத போதிலும், மரத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக 2020 திசெம்பர் 31 இல் எழுதப்பட்ட ரூபா.485,255 பெறுமதியான காசோலையின் மீதித் தொகை ரூபா. 305,424 பெறுமதியானது பதிவழிக்கப்பட்டு 10 மாதங்களுக்கும் மேலான காலத்தின் பின்னர் வழங்கப்பட்ட பொருட்களுக்கு ரூபா.179,830 பெறுமதி மட்டும் 2021 திசெம்பர் 03 ஆம் திகதியில் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. | நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, வழங்குனரின் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட பொருட்களுக்கு மட்டும் ரூபா. 179,831 செலுத்தப்பட்டு, மீதமுள்ள தொகை ரூபா. 305,424 அரச வருமானம் வரவு வைக்கப்பட்டது. | பெறுகை தொடர்பான கொடுப்பனவுகள் நிதி ஒழுங்கு விதியின் படி செய்யப்பட வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு பொது நிறுவனமும் சொத்து மதிப்பீடு மற்றும் கணக்கீட்டை மேற்கொள்ள வேண்டும் என்றாலும், திணைக்களத்தின் 04 பிரதேச பொறியியல் அலுவலகங்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள், 04 இயந்திரங்கள், 06 வாகனங்களின் பெறுமதி மற்றும் 08 மோட்டார் சைக்கிள்கள், 2021 திசெம்பர் 31 இன் மதிப்பீட்டின் படி கணக்கிடப்படவில்லை. | அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | திணைக்களத்திற்குச் சொந்தமான நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியை உடனடியாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் 04 பிரதேச காரியாலயங்களுக்குச் சொந்தமான ரூபா.103,675,000 பெறுமதியான காணிகள் மற்றும் கட்டடங்கள், 02 பிரதேச அலுவலகங்களுக்குச் | அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்களை உரிமை மாற்ற நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான மதிப்பிடப்படாத காணிகள் மற்றும் கட்டடங்கள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு உரிமை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (இ) | திணைக்களத்திற்கு காணிகளை வழங்குவதற்கு மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் குழுவினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தும், 02 பிரதேச பொறியியல் அலுவலகத்தினால் நிறுவப்பட்ட நிலையில் காணி பரிமாற்ற சான்றிதழ்கள் பெறப்படவில்லை. | அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | காணிப் பரிமாற்ற சான்றிதழ்கள் உடனடியாக பெறப்பட வேண்டும். |
| (ஈ) | 16 ஆண்டுகள் மற்றும் 09 ஆண்டுகளுக்கு முன் செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்கள் 2021 திசெம்பர் 31 வரை திணைக்களத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்ட 02 மோட்டார் சைக்கிள்கள் கையகப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | உரிமை மாற்ற நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | மொரட்டுவ பிரதேச அலுவலகத்துடன் தொடர்புடைய 2021 மார்ச் 01 ஆம் திகதி நடத்தப்பட்ட இருப்புக் கணக்கெடுப்பு அறிக்கை 2020 இன் படி, 29 வகையான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அழிக்கப்பட வேண்டிய 05 வகையான பொருட்கள் மற்றும் புதுப்பிக்கப்பட வேண்டிய 01 வகையான பொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு அந்தப் பொருட்கள் தொடர்பாக தொடர்புடைய பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை. | 2021 ஆண்டு வருடாந்த கணக்கெடுப்பு சபை உட்பட 2022 ஆம் ஆண்டில் இந்த அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. | உரிய பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | பிரதேச பொறியியல் அலுவலகக் கட்டடம் ஒன்றின் நிர்மாணிப்பதற்காக திணைக்களத்தினால் ரூபா. 6,722,465 செலவிடப்பட்டிருந்த நிலையில், இரண்டாவது மாடியை காலாண்டுகளாகப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதும், அந்த குடியிருப்புகள் பயன்படுத்தப்படவில்லை. | பிரதேச பொறியாளர் சுற்றுலா விடுதிகளின் தேவைக்கேற்ப துறை அலுவலர்கள் தங்குவதற்கு குடியிருப்பு வசதிகளுடன் கூடிய இரண்டு பகுதிகளைக் கொண்ட கட்டடத்தின் இரண்டாவது தளமாகவுள்ளது. இதற்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருட்கள் ஏற்கனவே உள்ள வரம்புகளை மீறாத வகையில் தேவையின் அடிப்படையில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்கள் உச்சபட்ச செயல்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (எ) 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதியிட்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2020 இன் 02(அ) இன் படி, இயங்கும் நிலையில் இல்லாத வாகனங்கள் 2020 திசெம்பர் 31 இற்கு முன்னர் அகற்றப்பட வேண்டும். மதிப்பீடு செய்யப்படாத மற்றும் இயங்கும் நிலையில் இல்லாத ஒரு குழு வண்டி மற்றும் 04 டிப்பர்கள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அகற்றப்படவில்லை. மேலும், அத்துறைக்குச் சொந்தமான அகழ்வாராய்ச்சி இயந்திரம் ரூபா.11,900,000 பெறுமதி 2019 செப்டெம்பர் முதல் இயங்கவில்லை. மேலும் 02 இயந்திரங்கள் 2018 ஒக்டோபர் முதல் செயல்படும் நிலையில் உள்ளன. ஆனால், அந்த இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படவும் அல்லது அகற்றப்படவுமில்லை. | அளவிடப்பட்டவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வருகின்றன. | இது சுற்றறிக்கையின் படி செய்யப்பட வேண்டும். |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 யூன் 23 முதல் 2022 யூன் 22 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு தொழிற்பாட்டு குத்தகை முறையின் கீழ் 2021 திசெம்பர் 31 இல் குத்தகைத் தொகை ரூபா.10,416,515 பெறுமதியானது செலுத்தி வாகனம் பெறப்பட்டது. 04 வருடங்கள் 06 மாத காலப்பகுதியில் ஓட்ட வேண்டிய குறைந்தபட்ச தூரம் 162,000 கி.மீ. வாகனம் ஓட்டிய மொத்த தூரம் 91,132 கி.மீ. இதன்படி, தொழிற்பாட்டு குத்தகை அடிப்படையில், தேவைகளை சரியாகக் கண்டறியாமல், பெறப்பட்ட வானின் குறைந்தபட்ச கிலோமீற்றர் இயக்காமல், 70,868 கிலோமீட்டர்களை குறைத்து பயன்படுத்தியதன் மூலம் திணைக்களத்திற்கு ரூபா. 4,556,775 பெறுமதியான நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. | நாட்டில் நிலவும் கொரோனா தொற்று நிலைமை காரணமாகவும், குறிப்பிட்ட நாட்கள் மட்டுமே பணியில் இருந்ததாலும், இந்த 02 வருடங்களில் மாதத்திற்கு 3000 கிலோமீற்றர் ஓட்ட முடியவில்லை. | வாகனத் தேவைகளை சரியான முறையில் கண்டறிந்து அதிகபட்ச செயற்திறனுடன் வாகனத்தை ஒட்டுவதற்கு கவனமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

4. **மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் 541 ஆக இருந்தாலும், உண்மையான பணியாளர்கள் 412 ஆக காணப்பட்டடன. எனவே, 129 பதவியணி வெற்றிடங்கள் உள்ளன, இவற்றில் 14 சிரேஸ்ட மட்ட பதவி வெற்றிடங்களும், 57 மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் பதவியணி வெற்றிடங்கள், 58 ஆரம்ப நிலை பதவியணிகளும் வெற்றிடமாக உள்ளன. | தகுதித்தேர்வு முடித்த அலுவலர்கள் இல்லாததாலும், பதவி உயர்வுக்கு நடத்த வேண்டிய தேர்வுகள் தாமதமானதினாலும், அலுவலர்கள் பல்வேறு துறைகளுக்க மாற்றமடைவதனால், ஆரம்ப நிலை அலுவலர்கள் பணி நியமனம் போன்றவற்றால் பல பதவியணி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நேரடியாக தொடர்புடைய 02 மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிகள், சிரேஸ்ட பொறியாளர் உட்பட 05 பொறியாளர் பதவி, 05 பிரதி மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிகள், 02 நீரியியல் ஆய்வாளர் பதவிகள் என 14 முக்கிய பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. | திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் நாயக பதவிகளை வகித்த 02 அதிகாரிகளில் ஒரு அதிகாரி பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். எனவே, ஒரு பதவி வெற்றிடமாகவுள்ளது. மற்றைய பதவிக்கு நியமனம் செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பொறியியலாளர் பதவிக்கான பொறியியலாளர்கள் பொது நிர்வாக அமைச்சிடமிருந்த கோரப்பட்டள்ளதுடன், மேலும், போதுமான எண்ணிக்கையிலான அதிகாரிகளுக்கு வழங்கப்படாததால் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |